# காலனித்துவ ஆட்சியின் பின் மட்டக்களப்புச் சைவக் கோயில்களும் அவை மீது எழுந்த பிரபந்தங்களும்

**ருஜானி நிமலேஸ்வரன்[1], சுகந்தினி ஸ்ரீமுரளிதரன்[2]**

**ஆய்வுச்சுருக்கம்:**

*இலங்கையில் இந்துப் பண்பாடு நிலைபெற்றுள்ள பிரதேசங்களில் மட்டக்களப்பு மாவட்டமும் ஒன்றாகும். காலனித்துவ ஆட்சியின் பின் மட்டக்களப்புச் சைவக் கோயில்களும் அவை மீது எழுந்த பிரபந்தங்களும் எனும் தலைப்பில் அமைந்துள்ள இவ்வாய்வானது பின்காலனித்துவ காலத்தில் மட்டக்களப்பில் ஏற்பட்ட இந்துப் பண்பாட்டு மாற்றங்கள், இந்துக்கோயில்கள், கோயில்களின் மீது பாடப்பட்ட பிரபந்தங்கள், அவை வெளிப்படுத்தும் இந்துப் பண்பாட்டம்சங்கள் என்பவற்றை வெளிக்கொணர்வதனை முக்கிய நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் வரலாற்றியல் ஆய்வுமுறை, பகுப்பாய்வு முறை ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. மட்டக்களப்பு பிரதேசத்தில் புராதனமான இந்துப் பண்பாடு நிலவியிருப்பதும், இந்தியாவிலிருந்து வெவ்வேறு காலப்பகுதிகளில் குடியேற்றங்கள் இடம்பெற்றிருப்பதும், ஐரோப்பியராட்சியில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டமையும் இந்த ஆய்வினூடாக வெளிப்படுத்தப்படுகின்றது. கோயில்களின் சிறப்பினையும் அதுசார்ந்த பண்பாட்டு அம்சங்களையும் வெளிக்கொணர்வதில் அக்கோயில்கள் மீதுபாடப்பட்ட பிரபந்தங்கள் முக்கிய ஆதாரங்களாகத் திகழ்கின்றன. இப்பிரபந்தங்களினூடாக வெளிப்படும் பண்பாட்டம்சங்களினை சமயம் மற்றும் தத்துவசிந்தனைகள், வாழ்வியல் சார்ந்த பண்பாட்டு அம்சங்கள் எனும் அடிப்படையில் இந்த ஆய்வானது வெளிப்படுத்துகின்றது.*

**திறவுச் சொற்கள் -** மட்டக்களப்பு, இந்துப்பண்பாடு, கோயில்கள், பிரபந்தங்கள், காலனித்துவம்

[1] *இந்துநாகரிகத்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்.*
nrujani@gmail.com
[2] *இந்துக் கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
ssuganthini@univ.jfn.ac.lk

## அறிமுகம்

இலங்கையிற் புராதன காலந்தொட்டு சைவசமயம் வளர்ச்சியுற்று வந்துள்ளமையினை வரலாறு புலப்படுத்தி நிற்கின்றது. எனினும், காலனித்துவக் காலப்பகுதியில் சைவசமயமானது பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தமையினைக் காணலாம். மட்டக்களப்பில் ஒல்லாந்தரது ஆட்சியைத் தொடர்ந்து கிழக்கிந்தியக் கம்பனி என்ற பெயரில் வருகை தந்த பிரித்தானியர்கள் 1802 இல் தடம் பதித்தனர். (வெல்லவூர்க்கோபால், 2005:96) மட்டக்களப்பில் கி.பி 1802 இல் கால்பதித்த பிரித்தானியர்கள் கி.பி 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடையும் வரை தமது ஆட்சியை நிலை நிறுத்தினர். இவர்களது ஆட்சிக்காலப் பகுதியில் மட்டக்களப்புத் தேசம் என்பது தற்பொழுதுள்ள மட்டக்களப்பு, அம்பாறை என்னும் இரு மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக இருந்தது.

பிரித்தானியர் மக்களின் நன்மதிப்பைப் பெற்று தமதாட்சிக்கு வலுவூட்டும் எண்ணத்துடன் பௌத்த, சைவ, கத்தோலிக்க சமயத்தவர்களது பொது வழிபாடுகளுக்கு எதிராக ஒல்லாந்தர் விதித்த சட்டங்களை நீக்கிச் சமய சுயாதீன கொள்கைகளைக் கடைபிடித்தனர். அரசாங்க சமயமென்று கிறிஸ்தவம் பிரகடனப்படுத்தப்படவில்லை. எல்லோருக்கும் வழிபாட்டுச் சுதந்திரங்கள் கிடைத்தன. இதனால் இந்துக்கள் தங்கள் சமய வழிபாடுகளைச் சுதந்திரமாக ஆற்றக்கூடிய நிலை ஏற்பட்டது.

சமய சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டதும் மட்டக்களப்பு இந்துக்கள் நீண்டகாலமாக செல்வாக்கு இழந்திருந்த இந்துசமயத்தை மீளக்கட்டியெழுப்பும் முயற்சியில் ஈடுபட்டனர். அந்நியர் ஆட்சியில் சிதைவுற்றிருந்த கோயில்களைப் புனருத்தாரணம் செய்தல், புதிய கோயில்களைக் கட்டுதல், கோயில்களை மையமாகக் கொண்டும், வழிபாட்டு முறைகளைச் செம்மைப்படுத்தியும் இலக்கியங்களை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டனர். இதன் விளைவாக கோயில்களின் எழுச்சியினை அடுத்து பல இந்துசமய இலக்கியங்கள் எழுச்சியடையத் தொடங்கின.

இலங்கை பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சிக்குள் கொண்டுவரப்பட்ட காலத்தில் சமூகத்தில் பல்வேறு புதிய சிந்தனைகள் உருவாகின. அவற்றுள் அச்சியந்திரத்தின் பாவனை பெருகியமை ஒரு முக்கியமான அம்சமாகும். அதுவரை காலமும் ஓலைச்சுவடிகளிலும் வாய்மொழி வழியாகவும் கிடைத்த இலக்கியங்கள் யாவும் அச்சுப்பெற்றன. பிரித்தானியர் ஆட்சியில் சமய சுதந்திரம் வழங்கப்பட்டமையினால் சமய உண்மைகளை மக்களுக்கு எடுத்து விளக்கும் நோக்கில் இலக்கியங்கள் பல தோற்றம் பெற்றன. வாய்மொழி மூலங்களாகக் குறித்த பிரதேச மக்களிடத்தே வழங்கி வருகின்ற சமயத் தொன்மங்கள், வழக்காறுகள் முதலியவற்றை இவை வெளிப்படுத்தி நிற்கின்றன.

ஒரு சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளை புலப்படுத்தும் வரலாற்று மூலங்களுள் இலக்கியங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அந்தவகையில் பிரபந்தங்கள் கோயில்

பண்பாட்டின் பன்முகப் பரிமாணங்களை ஆவணப்படுத்துவதோடு இந்து சமூகத்தின் சமூக வாழ்வியலின் அம்சங்களினை வெளிப்படுத்தும் வகையிலும் அமையப்பெற்றுள்ளன.

**ஆய்வின் நோக்கம்**

காலனித்துவ ஆட்சியின் பின் மட்டக்களப்புத் திருத்தலங்களின் வளர்ச்சியினையும், அவற்றின் மீது பாடப்பட்ட பிரபந்தங்களை அடையாளங் காணுதலும் அப்பிரபந்தங்களினூடாக புலப்படுத்தப்படும் இந்துப் பண்பாட்டினை வெளிக்கொணர்தலும் இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல்**

மட்டக்களப்பின் புராதன இந்துப்பண்பாட்டை அறிந்து கொள்வதற்கும், கோயில்கள் மற்றும் பிரபந்தங்களின் வளர்ச்சியை அறிந்து கொள்வதற்கும் வரலாற்று ஆய்வுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மட்டக்களப்புத் திருத்தலங்கள் மீது பாடப்பட்ட பிரபந்தங்கள் வெளிப்படுத்தும் பண்பாட்டம்சங்களை அடையாளங்கண்டு தொகுத்து வழங்குவதற்கு பகுப்பாய்வு முறை பயன்படுத்தப்படுகின்றது.

**கோயில்கள்**

மட்டக்களப்பு மாவட்ட இந்துப் பண்பாட்டு மரபின் தனித்துவத்திற்கு இங்குள்ள கோயில்களே சான்றுகளாகும். கோயில்கள் வெறுமனே வணக்கத்தலங்களாக மட்டுமன்றி பண்பாட்டு மையங்களாகவும் திகழ்கின்றன. மட்டக்களப்பு மாவட்டச் சமூக வரலாற்றியலுடன் தொடர்பான வகையில் மாவட்ட ஆலயங்களை வகைப்படுத்தலானது, இந்துப் பண்பாட்டின் தனித்துவமான பண்புகளை வெளிப்படுத்துகின்றது. பிராமணர்கள் கிரியைகள் செய்யும் கோயில்கள், கப்புகனார் பூசை செய்யும் கோயில்கள், பூசாரிமார் சடங்கு செய்யும் கோயில்கள், சைவக் குருமார்களின் பரிபாலனத்திலுள்ள கோயில்கள், ஊர்ப் பெரியவர்கள் பூசை செய்யும் கோயில்கள், கிராமியக் கோயில்கள் எனப் பல கோயில்களுள்ளன.

மட்டக்களப்பைப் பொறுத்த வரையில் ஆலயங்களே இங்குள்ள பல்வேறு சமூகங்களை இணைக்கும் ஒரு நிறுவனமாகத் தொழிற்படுகின்றது. இங்குள்ள ஆலயங்களை சமூகக் கோயில்கள், ஊர்க்கோயில்கள், தேசத்துக் கோயில்கள் எனவும் பிரித்துப் பார்க்க முடியும்.

கி.பி 1800ஐத் தொடர்ந்து போர்த்துக்கேய, ஒல்லாந்த கெடுபிடிகளும் கட்டுப்பாடுகளும் குறையத் தொடங்க, சைவசமய மறுமலர்ச்சி வேரூன்றத் தொடங்கியது. இதன் காரணமாக அழிக்கப்பட்ட ஆலயங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டதோடு, பல புதிய ஆலயங்களும் தோற்றம் பெற்றன. குறிப்பாக மட்டக்களப்பில் போர்த்துக்கேய மற்றும் ஒல்லாந்தர் காலப்பகுதிகளில் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்களால் இடித்தழிக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிகு ஆலயங்கள் பிரித்தானியர் ஆட்சிக் காலப்பகுதியில் மீண்டும் புனருத்தாரணம்

செய்யப்பட்டன. அவற்றுள் தாந்தாமலை முருகன் ஆலயம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம், சித்தாண்டி சித்திர வேலாயுதசுவாமி கோயில், வெருகல் சித்திரவேலாயுதர் கோயில், கொத்துக்குளத்து முத்துமாரி அம்மன் ஆலயம் போன்ற பல ஆலயங்கள் குறிப்பிட்டுக் கூறத்தக்கவையாகும்.

கிறிஸ்தவ பாதிரிமார் மட்டக்களப்புக் கிராமங்கள் தோறும் தேவாலயங்களை நிறுவி தமது சமயப் பணியினை முன்னெடுத்தபோது மட்டக்களப்பு இந்து சமயப் பெரியார்களும், இந்து சமய நிறுவனங்களும் இணைந்து இந்துக் கோயில்களை உருவாக்கத் தொடங்கினர். 19ஆம், 20ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியிலேயே மட்டக்களப்பில் அதிகளவான இந்துக் கோயில்கள் தோற்றம் பெற்றன.

**பிரபந்தங்கள்**

தமிழிலே சிற்றிலக்கிய வகைகள் எனச் சுட்டப்படும் இலக்கிய வடிவங்கள் பிரபந்தங்கள் என அழைக்கப்படுகின்றன. பிரபந்தமரபியல், பிரபந்ததீபிகை என்னும் நூல்களிலே பிரபந்த இலக்கிய வகைகளினது இலக்கணங்கள் கூறப்படுகின்றன. இவற்றின் எண்ணிக்கை தொண்ணூற்றாறு என்று கூறப்பட்டுள்ளது. (சுப்பிரமணியன்,ச.வே., பகவதி, கே., 1983:107) சமய ரீதியான நெருக்கடிகள் நிறைந்த காலப்பகுதியில் தோன்றிய இலக்கியங்கள் சமயம் சார்ந்திருந்தன. அந்தவகையில் மக்கள் மத்தியில் சமயக் கருத்துக்களை நிலைநிறுத்துவதற்கான பல்வேறு அம்சங்களைப் பிரபந்தங்கள் கொண்டிருந்தன.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிப்போக்கில் பத்தொன்பதாம் நூற்றாண்டு சமயப் பிரசாரம் இடம்பெற்ற காலமாகும். இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்கள் தத்தம் மதக் கருத்துக்களை மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வதற்கு இலக்கியங்களையே பயன்படுத்தின. இதனால் சமயப்பிரசார வாகனமாக அமைதல் என்ற பண்பு பத்தொன்பதாம் நூற்றாண்டு இலக்கியங்களிற்குரியதாகின்றது. அந்தவகையில் ஈழத்திலுள்ள சைவாலயங்களில் எழுந்தருளியுள்ள கடவுள் மீது பாடப்பட்ட அந்தாதி, ஊஞ்சல், அகவல், மான்மியம் போன்ற பிரபந்தங்கள் மதப்பிரசார இலக்கியங்களாகும்.

ஈழத்தில் பிள்ளைத்தமிழ், தூது, உலா, கோவை, கலம்பகம், மடல், குறவஞ்சி, அந்தாதி, இரட்டைமணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை, சதகம், அம்மானை, பதிகம், ஊஞ்சல் ஆகிய பிரபந்த வகைகளும் புராணங்களும் பின்காலனித்துவ காலப்பிரிவிலேயே பெருமளவிற் தோன்றின. (நடராசா,எவ்.எக்ஸ்.சி., 1970:32)

மட்டக்களப்பில் மரபு வழியாக நிலவி வந்த இந்துசமயமானது பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் பல்வேறு மாற்றங்களையும் வளர்ச்சியினையும் அடைந்தது. இதனடிப்படையில் மட்டக்களப்பு மரபுவழித் தமிழறிஞர்கள் பலர் அம்மானை, நவமணிமாலை, திருவிருத்தமாலை, பிள்ளைத்தமிழ், காவியம், பதிகம், அகவல் எனும் வடிவிலமைந்த

பிரபந்தங்கள் பலவற்றைப் பாடியுள்ளனர். இவையனைத்தும் கிராமங்கள் தோறும் அமைந்துள்ள ஆலயங்களைக் குறித்துப் பாடப்பட்டவையாகும்.

வெருகல் சித்திரவேலாயுதர் காதல் (வீரக்கோன் முதலியார்), வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி பதிகம் (தா.முருகேசபண்டிதர்), வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி திருவூஞ்சல் (தா.முருகேசபண்டிதர்), வெருகல் சித்திரவேலாயுத சுவாமி பேரில் சிறைவிடு பதிகம் (வே.அகிலேசப்பிள்ளை), வெருகலம்பதிப்பதிகம் (மு.சோமசுந்தரம்பிள்ளை), வெருகலம்பதி போற்றிப்பத்து (மு.சோமசுந்தரம்பிள்ளை), சித்தாண்டித் திருத்தல புராணம் (நா.அழகேசமுதலியார்), சித்தாண்டிக் கீர்த்தனை (பி.சிவலிங்கம்), அருள்மிகு சித்தாண்டி வேலவர் ஊஞ்சல் (ஆசிரியர் அறியப்படவில்லை), சித்தாண்டி கீர்த்தனை (பி.சிவலிங்கம்), சித்தாண்டி முருகன் அந்தாதி (சிகண்டிதாசன்), ஸ்ரீமாமாங்க விநாயகர் பதிகம் (அ.சரவணமுத்தன்), ஆரையம்பதி ஸ்ரீ கந்தசுவாமி திருவூஞ்சல், மண்டூர் முத்துக்குமாரசுவாமி பதிகம் (உடுப்பிட்டி சிவசம்புப்புலவர்), திருக்கோயிற் பதிகம் (க.பரராஜசிங்கம்), திருக்கோயில் சித்திரவேலாயுதர் திருத்தலபுராணம் (க.லோகநாதக்குருக்கள்), மண்டூர் வடிவேலர் தோத்திரமாலை (ஏ.கந்தையா), மண்டூர் முருகன் பதிகம் (க.பரராஜசிங்கம்) போன்ற பல பிரபந்தங்கள் குறிப்பிட்டுக் கூறத்தக்கவையாகும்.

இப்பிரபந்தங்கள் மனித வாழ்வின் பல்வேறு அனுபவங்களைப் பிரதிபலிக்கின்றன. இவை தாம் எழும் காலகட்ட சமூக வரலாற்றை, அதன் கூறுகளை, அரசியலை, பொருளியலை வெளிப்படுத்தும் தன்மை கொண்டமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, பிரபந்த வகைகளுள் ஒன்றான ஊஞ்சற்பாடல்கள் இதிகாசம் சார்ந்தவையாகவும் (கண்ணகி ஊஞ்சல் பாடல்), புராணம் சார்ந்ததாகவும் (வள்ளி திருமணம்), வரலாறு சார்ந்ததாகவும் (கண்டி அரசன், பண்டாரவன்னியன் (ஒல்லாந்தர் படையெடுப்பு) அமைந்துள்ளன. இவ்வகையில் இப்பிரபந்தங்கள் ஊடாக அக்காலச் சமூக, பண்பாட்டு அம்சங்களை இனங்காணக்கூடியதாக உள்ளது. இவற்றுள் பெரும்பாலானவை இந்து சமயக் கருத்துக்களையும் தத்துவங்களையும் வெளிப்படுத்தும் முகமாகத் தோற்றம் பெற்றவையாகும்.

## பிரபந்தங்களினூடாக வெளிப்படுத்தப்படும் இந்துப்பண்பாட்டம்சங்கள்

### தத்துவம்

இந்து தத்துவ சிந்தனை என்பது மெய்ப்பொருள் ஆராய்ச்சியாகும். மட்டக்களப்பு திருத்தலங்கள் மீது பாடப்பட்ட பிரபந்தங்களினூடாக தத்துவக் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளமையினைக் காணக்கூடியதாகவுள்ளது. சைவத்தின் முடிந்த முடிவாய் அமையும் சைவசித்தாந்தக் கருத்துக்களை ஸ்ரீமாமாங்க பிள்ளையார் பதிகம் வெளிப்படுத்தியுள்ளமையினைக் காணலாம்.

''பதிபாச பசுவாம் பதார்த்தகுண மனதினிடை....''

''மாயையே மலகன்ம காமக் குரோதமாம்....'' (நாகலிங்கம்,இரா., 1991:10)

போன்ற பாடலடிகள் மூலம் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருட்கள் தொடர்பான கருத்துக்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

உடலென்பது நிலையில்லாத அழிவடையும் பொருள் என்பதனை அம்பாறை விநாயகர் நான்மணிமாலை,

''முன்னே நொறுங்குங் கலமான
சூதாய்ச் செய்த இவ்வுடலைச்
சும்மா சுமந்து....''

எனக் கூறிள்ளமையினைக் காணலாம்.

**புராணக்கதைகள்**

புராணக்கதைகள் மக்கள் மத்தியில் பக்தியினை வலுப்படுத்தும் ஊடகமாக பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அந்தவகையில் முருகப் பெருமான் சூரபத்மனை வென்ற புராணக்கதையினை வெருகல் சித்திரவேலாயுதர் காதலில் ''சூரனை முன் செற்ற சுடர் வடிவேற் கையையுடைய வீரனடியேற்கருளும் வேலவன்…'' (வெருகல் சித்திரவேலாயுதர் காதல், 2000:33) கூறப்பட்டுள்ளது. மேலும் இப்பிரபந்தத்தில் முருகப் பெருமான் பிரம தேவனுடைய தலையிற் குட்டி பிரணவத்தின் பொருளுரைத்த செய்தியும் கூறப்பட்டுள்ளது. சிவனிடமிருந்து மாங்கனியினைப் பெற்றுக் கொள்ள மயிலேறி உலகினைச் சுற்றி வந்த புராணக்கதையினை, ''தந்தைகையின் மாங்கனிக்காய்த் தக்க மயின்மீதேறிச் சுந்தரஞ்சேர் பூமியைமுன் சுற்றி வந்த பாதமிதோ'' (வெருகல் சித்திரவேலாயுதர் காதல், 2000:87) என்ற வெருகல் சித்திரவேலாயுதர் காதல் பாடல் வெளிப்படுத்துகின்றது.

**மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புக்கள்**

மக்கள் இறைவனை வழிபடுவதற்கும் தெய்விக வரலாற்றினை அறிவதற்கும் பிரபந்தங்கள் வழிகோலுகின்றன. இறையுருவ அமைப்புக்கள், வாகனங்கள், ஆயுதங்கள், ஆபரணங்கள் போன்ற பல விடயங்களை பிரபந்தங்கள் வெளிப்படுத்துகின்றன.

''குரவைநின் றெழுகோடி ஞாயிறு குவிந்த சீர்
குஞ்சர முகத்தி னழகும்……..
செகமெலாந் தன்னுள் ளடக்கியகல் வானநற்
சீருதர லம்ப வழகும்……….'' (நாகலிங்கம்,இரா., 1991:5)

என்ற ஸ்ரீ மாமாங்க விநாயகர் பதிகத்தினூடாக விநாயகருடைய தோற்றச் சிறப்பு எடுத்தியம்பப் பெற்றுள்ளமையைக் காணலாம்.

**வழிபாட்டம்சங்கள்**

குடியானவர்கள் தமக்குற்ற இடர்களையும், துன்பங்களையும் போக்குவதற்கு மேற்கொண்ட வழிபாடுகள் மற்றும் நேர்த்திக்கடன் பற்றிய செய்திகளைப் பிரபந்தங்களினூடாக அறியலாம். வெருகல் சித்திரவேலாயுதர் காதலில் நேர்த்திக் கடனாக அபிஷேகம் செய்தல், வெருகலம்பதி கோயில் வாசலில் காசு வைத்தல், நீலாப்பளை பத்தினியை வேண்டி நேர்த்தி செய்தல், சம்பூர் பத்திரகாளி கோயிலில் இழை கட்டுதல் முதலியவற்றை தேசத்தார் செய்வது வழமை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. காப்புக் கட்டுதலினை வெருகல் சித்திரவேலாயுதர் காதல் பாடலொன்று பின்வருமாறு கூறுகின்றது. ''தேவி பத்திரகாளிதனக் கையமற நேர்ந்திழைய யாயிழை கைக் கட்டுமென்பார்...'' (வெருகல் சித்திரவேலாயுதர் காதல், 2000:120)

கோயில்களில் இடம்பெறும் தோத்திரம் பாடுதல், கூட்டுப்பிரார்த்தனை, மாலை சூடுதல் எனப் பல்வேறு வழிபாட்டு முறைகளைப் பிரபந்தங்கள் ஊடாக அறிந்து கொள்ள முடிகின்றது. களுதாவளைப் பிள்ளையார் மும்மணிமாலையில்

''கூடியும் பாடியும் ஏத்தியுங்
கூட்டுப் பிரார்த்தனைக் கோயில் வாயிலில்.....'' (சோமசுந்தரப்பிள்ளை, 2016:21)

எனப் பல வழிபாட்டம்சங்கள் கூறப்பட்டுள்ளது.

நைவேத்தியங்கள் படைத்து வழிபடுதலினை அம்பாறை விநாயகர் நான்மணிமாலை பின்வருமாறு கூறுகின்றது.

''பாலுந் தேனும் பாக்குவெற் றிலையும்….
வெள்ளை யவலும் விரும்புங் கடலையும்
நல்ல கற்கண்டும் நன்றாய் படைத்தும்….'' (சோமசுந்தரப்பிள்ளை, 2016:13)

**அரசர்களின் ஆதரவு**

மட்டக்களப்பில் திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம், போரதீவு சித்திர வேலாயுதர் ஆலயம் என்பவற்றுக்கு குளக்கோட்ட மன்னன் சீர்வரிசை செய்ததாகக் கூறப்படுகின்றது (மௌனகுரு,சி., 2003:12). குளக்கோட்டனின் சீர்வரிசைப் பாடலில் ''வெற்றிபுனை மயூர சித்திர சங்கார வேல்'' எனும் பாடல் அடியானது வெருகலைக் குறித்து நிற்பதாகக் கூறப்படுகின்றது.

வெருகல் சித்திர வேலாயுதர் காதலில் கண்டி நகராளும் இராசசிங்கனின் புகழும் சைவசமயப் பற்றும் கூறப்படுகின்றன.

'மெத்து புகழ்வாய்ந்த வெருகற் பதியுறையுஞ்
சித்திரவே லாயுதரின் சீரடியி லன்புகொண்டு
மானமுடன் மிக்க வயனிலமுந் தோப்புகளும்

மானியமா யீந்த மகராச ராசேந்திரன்
மாணிக்கம் வைத்திழைத்த வன்னப் பதக்கமுடன்
பூணணிக ளீந்த புகழ்படைத்த பூபாலன்
கண்டி நகராளுங் கனகமுடி ராசசிங்கன்
தெண்டனிடும் போதெனது சேதியைநீ சொல்லாதை'
(வெருகல் சித்திரவேலாயுதர் காதல். 2000:140-141)

அதாவது வயல் நிலங்களையும் தோப்புகளையும் மானியமாக வழங்கினான் எனக் கூறுகின்றது. மேலும் மாணிக்கக்கற்கள் பதித்துச் செய்யப்பட்ட பதக்கத்தையும் வேறு ஆபரணங்களையும் மன்னன் வழங்கினான் என்றும் சொல்லப்படுகின்றது.

**கலையம்சங்கள்**

ஆலயங்கள் சிற்ப சாஸ்திர முறைகளுக்கமைய அமைக்கப்பட்டமையினை வெருகல் சித்திரவேலாயுதர் காதல் "சித்ர மிகு கோயிற் சினகரத்தின் முன்பாக…."(59) எனக் கூறுவதனூடாக அறியலாம்.

"தென்னிலங்கை ராவணனைச் செய்ய விரலாலூன்றிப்
பின்னவன்ற னின்னிசையைப் பெட்புடனே கேட்டு வந்து….."(3)

என்பதனூடாக இராவணன் சாமகானம் இசைத்தமை பற்றி வெருகல் சித்திரவேலாயுதர் காதலில் இசைக்கலையின் ஆரம்பம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

வாத்திய வகைகளிற் சித்திர வேலாயுதர் காதலிலே சங்கு, தவில், பம்பை, தடாரி, சின்னம் ஆகியன கூறப்படுகின்றன. ஈழத்தின் கிழக்கு மாகாணத்துக்கே விசேடமான வசந்தன் விளையாட்டு வெருகல் சித்திரவேலாயுதர் உலாவரும் போது ஆடப்படுவதாகக் கூறப்படுகிறது.

மண்டூர் பிள்ளைத்தமிழ் பிரபந்தத்தில் இசையால் இறைவனை வழிபட்டமை கூறப்பட்டுள்ளமையினைக் காணலாம்.

"மத்தளமடித்துகைத் தாளங்கள் கொட்டிமகிழ்
வாகநா டகநடித்தும் ….." (விஸ்வலிங்கம்,வி., 1988:23)

**நம்பிக்கைகள்**

எந்தவொரு செயலினையும் விநாயகரை வணங்கி ஆரம்பித்தல் இந்துக்களின் நம்பிக்கையாகும். இதனை வெருகல் சித்திரவேலாயுதர் காதல் காப்பு வெண்பா, "மாதுமையாளீன்றெடுத்த தும்பிமுகன் பாதந்துணை" எனக் கூறுகின்றது,

முருகப் பெருமான் வீதியுலா வருவதற்கு நல்ல முகூர்த்தம் பார்க்கப்பட்டமையினை வெருகல் சித்திரவேலாயுதர் காதல் கூறுகின்றது.

"புவனமதின் மிக்க புகழ்சேர் கணிதர்களே
புவனி வர நன்முகூர்த்தம் பார்த்துரையுமென்று சொன்னார்"

(வெருகல் சித்திரவேலாயுதர் காதல், 2000:42)

சோதிடக்கலையின் செல்வாக்குப் பற்றி வெருகல் சித்திரவேலாயுதர் காதலில் கூறப்படுகின்றது.

"எக்கலையுங் கற்ற வியல்புறு நற் சோதிடரை மிக்க மகிழ்வாயழைத்து…"

(வெருகல் சித்திரவேலாயுதர் காதல், 2000:41)

வெருகல் சித்திரவேலாயுதர் காதல்,

"விற்புருவ மாதர்சிலர் மின்கனகத் தட்டின் மிசை
கற்பூராலாத்தி கவின் பெறவே…."

(வெருகல் சித்திரவேலாயுதர் காதல், 2000:63)

என்ற பாடலினூடாக பெண்கள் ஆலாத்தி எடுத்தமையினைக் கூறி நிற்கின்றது.

**நிறைவுரை**

கிழக்கிலங்கையில் அமைந்துள்ள மட்டக்களப்புப் பிரதேசமானது நீண்ட காலமாக இந்துப்பண்பாடு நிலைபெற்று வருகின்ற ஒரு பிரதேசமாகும். காலத்திற்குக் காலம் இங்கு ஏற்பட்ட குடியேற்றங்களின் மூலமாக இப்பிரதேச இந்துப் பண்பாட்டில் மாற்றங்களும், வளர்ச்சிகளும் ஏற்பட்டுள்ளன. மட்டக்களப்பு வரலாற்றில் காலனித்துவ ஆட்சியின் பின், குறிப்பாக பிரித்தானியராட்சிக் காலப்பகுதியில் சமூகம், பொருளாதாரம், பண்பாடு ஆகிய துறைகள் வளர்ச்சியுற்றன. இக்காலப்பகுதியில் கிறிஸ்தவ சமயம் அரசாங்க சமயமென்று பிரகடனப்படுத்தப்படாமையினால் எல்லோருக்கும் சமயச் சுதந்திரம் கிடைக்கப்பெற்றதனால் சமயப் பெரியார்கள் பலர் தோன்றிச் சமயப் பிரச்சாரங்களை நிகழ்த்தியும், சைவாலயங்களை புனர்நிர்மாணம் செய்தும், சைவசமய இலக்கியங்களைப் படைத்தும் சைவசமய மறுமலர்ச்சியினை ஏற்படுத்தினர்.

இக்காலப் பகுதியில் கோயில்கள் சார்ந்த இலக்கியங்கள் பெருமளவு தோன்றியுள்ளன. சமய உண்மைகள், வழிபாட்டு நியமங்கள், விரதமகிமைகள் முதலியவற்றைக் கூறும் பிரபந்தங்களினூடாக சமயப் பற்றினையும், சமய உறுதியையும் நிலைநாட்ட இந்து சமய அறிஞர்கள் முயன்றனர். இதன் விளைவாக 19ஆம், 20ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் அந்தாதி, அம்மானை, இரட்டைமணிமாலை, கலம்பகம், கலித்துறை, வெண்பா, ஊஞ்சல், அகவல், மான்மியம், பதிகம், நவமணிமாலை, திருவிருத்தமாலை, திருப்பவளமணிமாலை, கீர்த்தனை, பாமாலை, போற்றிப்பதிகமாலை, பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்கள் பல எழுந்தன.

இப்பிரபந்தங்களில் தலச்சிறப்பு, தத்துவம், அற்புதம், ஆலய வழிபாடு, வழிபாட்டுமுறைகள், புராணக்கதைகள், விரதங்கள், விழாக்கள், நேர்த்திக்கடன்கள், கோயிற்கலைகளான கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, அலங்காரக்கலை முதலியவை பற்றிய செய்திகள் பதிவாகியுள்ளன. இதனூடாக கோயில்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் வரலாற்றுக் குறிப்புகள் பற்றிய செய்திகளையும் அறியத் துணைபுரிகின்றன.

மட்டக்களப்புத் திருத்தலங்கள் மீது பாடப்பட்ட பிரபந்தங்கள் சமயபக்தி இலக்கியங்களாக மட்டுமன்றி சமூகப்பண்பாட்டு மேம்பாட்டுச் சிந்தனைகளையும் புலப்படுத்துகின்ற இலக்கியங்களாக திகழ்கின்றமை சிறப்பான விடயமாகும். இப்பிரபந்தங்கள் ஊடாக அரசு, நிர்வாகக் கட்டமைப்பு, பொருளாதாரம், சாதி அமைப்பு, வாழ்வியல் சடங்குகள், நம்பிக்கைகள், சமுதாயப்பிரச்சினைகள், போரின் அவலங்கள் போன்ற பல்வேறு அம்சங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. தேச வரலாற்றின் அத்தியாயமொன்றினை மீட்பதற்கு ஏதுவா யுள்ளன. இதனடிப்படையில் தோற்றம் பெற்ற பிரபந்தங்கள் மட்டக்களப்பின் இந்துப் பண்பாட்டினை புலப்படுத்தி நிற்கும் பேராவணங்களாகும்.

இப்பிரபந்தங்கள் கோயிலை மையப்படுத்தி, அக்கோயில் விளங்கும் பிரதேசத்து மக்களின் சமய, தத்துவ, கலை சார்ந்த சமூகப் பண்பாட்டு அம்சங்களைப் பிரதிபலித்துக் காட்டுகின்றன. இவை பண்பாட்டின் பல்வேறு பரிமாணங்களை அறிவதற்குரிய வரலாற்று ஆவணங்களாகத் திகழ்கின்றன. இப்பிரபந்தங்களுள் பல வாய்மொழி மரபாக பாடப்பட்டு வந்துள்ளமையினை அறிந்து கொள்ள முடிந்தது. எனினும் அவையனைத்தும் எழுத்துருப் பெற்றதாகத் தெரியவில்லை. இதனால் பல பிரபந்தங்கள் தொடர்பாக அறியமுடியாதுள்ளது. அதே போன்று பிரபந்தங்கள் சிலவற்றின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. சில பிரபந்தங்களில் பாடப்பட்ட ஆண்டு குறிப்பிடப்படவில்லை. இது தொடர்பாக முழுமையான பதிப்பொன்றினை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். மட்டக்களப்பு தவிர்ந்த ஏனைய பிராந்தியங்களில் கோயிற் பிரபந்தங்கள் தொடர்பாக ஆராய முனைவோர்க்கு இவ்வாய்வு துணைபுரியும்.

## உசாத்துணை


இளையதம்பி தங்கராசா., (2008), மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரம் பிள்ளையார் மான்மியம், லட்ஜெம்ஸ், மட்டக்களப்பு.

கந்தையா,வி.சீ., மட்டக்களப்புச் சைவக்கோயில்கள், இந்து சமட்ய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

சுப்பிரமணியன்,ச.வே., பகவதி, கே., (1983), தமிழ் இலக்கியக் கொள்கை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

நடராசா,க.செ., (2008), ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

நடராசா,எப்.எக்ஸ்.சி., (1998), மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு மாவட்ட கலாசார பேரவை, மட்டக்களப்பு.

நடராசா, எப்.எக்ஸ்.சி., (2001), ஈழத்து தமிழ் நூல் வரலாறு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

நவரட்ணம் குகபரன்., (2017), ஈழத்தில் ஒல்லாந்தர் காலத் தமிழ் இலக்கியங்கள் - சமூக அரசியல் நோக்கு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

நாகலிங்கம்,இரா., (1991), ஸ்ரீமாமாங்க விநாயகர் பதிகம், நிழல் வெளியீடு, கனடா.

பத்மநாதன்,சி., இரகுபரன்,கு., பிரசாந்தன்.ஸ்ரீ., (1997), பிரித்தானியர் ஆட்சியும் நவீனமயமாக்கலும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

மௌனகுரு,சி., (2003), மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு, 2ஆம் உலக இந்துமாநாடு, மட்டக்களப்புப் பிரதேசக் கிளை.

வடிவேல்,இ., (2000), வெருகல் சித்திரவேலாயுதர் காதல், இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

வெல்லவூர்க்கோபால், (2005), மட்டக்களப்பு வரலாறு, மனுவேதா, மட்டக்களப்பு.

வேலுப்பிள்ளை. சூ., (2009), ஈழத்துப் பழைய இலக்கியங்கள் வரலாறு தேடல், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

சோமசுந்தரப்பிள்ளை, மு., (2016), பக்திப்பாமாலை, கலை இலக்கிய அவை, மண்டூர்.

விஸ்வலிங்கம், வி., (1988), மண்டூர்ப்பிள்ளைத்தமிழ், களுவாஞ்சிக்குடி பிரதேச கலாசாரப் பேரவை, களுவஞ்சிக்குடி.